மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு மனை கிடைக்கப் பெறாதோர் குடிசை மாற்று வாரியத்துடன் தொடர்பு கொண்டால் அவர்கள் முன்பணம் ஏறக்குறைய ரூ. 89 கட்ட வேண்டும் என்ற விவரம் அவர்களுக்குச் சொல்லப்படும். தனியாக அவர்களுக்கு அனுப்ப முடியுமா என்பதைக் குடிசை மாற்று வாரியத்தோடு கலந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப் படும்.

*திரு. சைதை சா. துரைசாமி : துணைத் தலைவர் அவர்களே, இதே நகரில் அடுத்த பகுதி, சி.ஐ.டி. நகர் கால்வாய் அருகே அமைந்திருக்கின்ற 141-வது வட்டம் லூப் தெருவில் உள்ள 22 குடியிருப்புதாரர்களுக்கு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குக் குடிசை மாற்று வாரியம் பரிந்துரை செய்தும், அந்த இடம் கால்வாய்க்கு அருகில் இருக்கிறது என்று பட்டா வழங்க MMDA அதிகாரிகள் மறுக்கிறார்கள். எனவே, ஒரு பகுதியான சி.ஐ.டி. நகர் பகுதிக்கு வழங்கியதற்குப் பிறகு, மற்றொரு பகுதியான லூப் தெருவிற்கு அந்தத் திட்டம் பொருந்துகின்ற அடிப்படையில், அந்த 22 நபர்களுக்கு, குடியிருப்புதாரர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:"இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84-ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) சமூக நலத்துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் நாற்பதாவது அறிக்கை''

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம்(தொடர்ச்சி)

*திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது சில கருத்துக்களை நான் இங்கே கூறிக் கொள்ள விருப்புகிறேன்.

நல்ல சில திட்டங்களை உரையில் கூறியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இருக்கின்ற சாராயக் கடைகளுக்கு மூடு விழா நடத்திய இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறேன். இருந்தாலும் அதிலேகூட சிறிய வருத்தம் என்ன